# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.45/2024

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விநாயகம் | மதம் | : இந்து |
| த/பெ | : கிருஷ்ணா ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 66 | கிராமம் | : தரணிவராகபுரம் |
| தொழில் | : ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**20.08.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என் அப்பா பெயர் கிருஷ்ணா ரெட்டி என்றால் சரிதான். என் தாத்தா பெயர் எல்லிஅண்ணாசாமி ரெட்டி என்றால் சரிதான். எல்லிஅண்ணாசாமி ரெட்டிக்கு நான்கு பிள்ளைகள் என்றால் சரிதான். 1. சஞ்சீவி, 2. சுப்பிரமணி, 3. என் அப்பா கிருஷ்ணா ரெட்டி, 4. சிவலிங்கம் என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள 1ம் பிரதிவாதி ஆஞ்சிநேய ரெட்டி சுப்பிரமணிய ரெட்டியின் மருமகன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி வாணி ஆஞ்சிநேய ரெட்டியின் மகள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி பரந்தாமன் ஆஞ்சிநேய ரெட்டியின் மகன் என்றால் சரிதான். அனிதா வாணியின் மகள் என்றால் சரிதான். புருஷோத்தமன் வாணியின் மகன் என்றால் சரிதான். சேகர், சித்ராகுமார் ஆகியோர் ஆஞ்சிநேய ரெட்டியின் பிள்ளைகள் என்றால் ஆஞ்சிநேய ரெட்டியின் 2ம் மனைவி பிள்ளைகள் ஆவார்கள். வாணி, பரந்தாமன் ஆஞ்சிநேய ரெட்டியின் முதல் மனைவி பிள்ளைகள் ஆவார்கள்.

2. தெய்வானையம்மாள் ஆஞ்சிநேய ரெட்டியின் மனைவி என்றால் இல்லை. ஆஞ்சிநேய ரெட்டியின் மனைவி பெயர் மாணிக்கம்மாளின் மகள் சகுந்தலா ஆகும். எனது பிராதிலேயே நான் தெய்வானையம்மாளை ஆஞ்சிநேய

ரெட்டியின் மனைவி என்று சொல்லியுள்ளேன் என்றால் தவறு. வழக்கு சொத்து ஆதியில் அண்ணாசாமிக்கு சொந்தம் என்றால் ஆமாம். அண்ணாசாமி பெயரில் பட்டா, அ பதிவேடு ஆகியவை அண்ணாசாமி பெயரில் இருந்தது என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் புல எண் என்ன என்றால் புல எண்.176/12ல் 29 செண்ட் ஆகும். வழக்கு சொத்திற்கு கலீல் பெயரில் பட்டா எப்போதும் இருந்ததில்லை என்றால் சரிதான். அதேபோல் என் அப்பா பெயரிலும் பட்டா இருந்ததில்லை என்றால் பட்டா இருந்ததால்தான் என் அப்பா ஜாமீன் கையெழுத்து போட்டு நாங்கள் சிறுவயதில் இருக்கும்போதே அந்த சொத்து ஏலத்தில் போய்விட்டது.

3. என் அப்பா பெயரில் இருந்த பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சொத்து ஏலத்திற்கு போனதை கலீல் பாயிடமிருந்து 1985ம் ஆண்டு நான் வாங்கினேன். என் தாத்தா அண்ணாசாமியிடம் இருந்து என் அப்பா பெயருக்கு சொத்து எப்படி வந்தது என்றால் என் தாத்தாவே என் அப்பாவிற்கு பாகத்தில் எழுதி வைத்தார். என் தாத்தா என் அப்பாவிற்கு எழுதி வைத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் என் தாத்தா என் அப்பாவிற்கு எழுதி வைக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் அப்பாவுடன் பிறந்த 4 பேருக்கும் நான் ஒரே ஆண் பிள்ளைதான். நான்தான் அவர்கள் நான்கு பேருக்கும் இறுதி காரியங்கள் என் செலவில் செய்தேன்.

4. என் அப்பாவுடன் பிறந்த மற்ற சகோதரர்களுக்கு பெண் பிள்ளைகள் உள்ளார்கள் என்றால் சஞ்சீவி ரெட்டிக்கு பிள்ளைகளே இல்லை. சுப்பிரமணிக்கு மாணிக்கம்மாள் மூலம் சகுந்தலா என்ற ஒரே மகள் உள்ளார். சிவலிங்கத்திற்கும் வாரிசுகள் இல்லை. என் அப்பாவுடன் பிறந்த நால்வரும் திருமணமாகி அவரவர் மனைவியுடன் வசித்து வந்தனர் என்றால் ஆமாம். நான் யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் கலீல் பாயிடம் இருந்து வாங்கினேன். நான் கலீல் பாயிக்கு சொத்து எப்படி வந்தது என்பதை சொல்லியுள்ளேனா என்றால் கலீல் பாய் ஏலத்தில் எடுத்தார். நான் அவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். கலீல் பாய்

ஏலத்தில் எடுத்தார் என்பதையும் நான் கலீல் பாயிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்ற விவரத்தையும் நான் எனது பிராதிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

5. வா.சா.ஆ 1ஐ எழுதி கொடுத்த கலீல் பெயருக்கு தாவா சொத்தை பொறுத்து கிரைய ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை கலீல் பாய் ஏலத்தில் எடுத்தார் என்பதற்கும் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். கிரையதாரர் கலீலுக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்திற்கு நான் வரி செலுத்தவில்லை என்றால் நான் விவசாய கடன் பெற்றுள்ளேன். நான் வழக்கு சொத்திற்கான வரி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து கலீல் பெயரில் இருந்தது என்பதற்கோ என் அப்பா பெயரில் இருந்தது என்பதற்கோ எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பிரதிவாதிகளுக்குதான் வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்றும் எனக்கு உரிமை இல்லை என்றும் பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். வழக்கு சொத்தில் எனக்கு உரிமை விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. சுப்பிரமணி, சிவலிங்கம் பங்கிற்குதான் வழக்கு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை சுப்பிரமணி, சிவலிங்கம் அனுபவித்து வந்தனர் என்றால் சரியல்ல. சுப்பிரமணியின் மனைவி பெயர் காமாட்சி என்றால் சஞ்சீவி ரெட்டியின் மனைவி பெயர்தான் காமாட்சி ஆகும். காமாட்சியும் சிவலிங்கமும் சேர்ந்துதான் வழக்கு சொத்தை ஆஞ்சிநேய ரெட்டிக்கு கிரையம் கொடுத்தனர் என்றால் வழக்கு சொத்து ஏலத்திற்கு சென்ற பின்புதான் அந்த கிரையம் எழுதி கொடுத்துள்ளனர். செங்கல்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு சொத்து ஏலத்திற்கு சென்ற பின்பு அவர்கள் எப்படி கிரையம் எழுதி கொடுக்க முடியும். சொத்து எந்த

தேதியில் ஏலத்திற்கு வந்தது என்றால் எனக்கு 5 வயதிருக்கும்போது ஏலத்திற்கு சென்றது. வழக்கு சொத்து ஏலத்திற்கு சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)